உ
சிவமயம்

Registered as a News-
paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத்.ருகூ] யாழ்ப்பாணம்:—தாரணஎு ஐப்பசிமீ கசவ (1944 ஒக்டோபர்மீ 30 திங்கட்கிழமை) [இல ருகூ

# மற்றொரு உபவாசத்திற்கு மகாத்மா தயாராகிறாராம்!

## நோக்குமிடமெல்லாம்பலாத்காரதாண்டவமா?

### "என் அகிம்ஸா தர்மம் கொதித்தெழுகிறது"

"வகுப்பு ஒற்றுமையைப் பெறுவதற்காக உபவாசமிருக்கக் காந்திஜி உத்தேசித்திருப்பதாக அலகபாத்திலிருந்து ஒருசெய்தி வெளிவந்திருக்கிறது. இது உண்மையா அல்லவா? என்று நீங்கள் சொல்ல முடியுமா?" என்று ஒருதந்தியை மிஸ்டர். ஹார்மன் ஸ்ரீ பியாரிலாலுக்கு அனுப்பினாராம்.

அக்டோபர், 29

ஸ்ரீ ஹார்மனின் தந்திக்கு ஸ்ரீ பியாரிலால் அனுப்பிய மகாத்மாஜீயின் பதில் இதுதான்:-

"உங்கள் தந்திக்காக வந்தனம்; செய்திக்கு ஆதாரமேயில்லை"

"மேற்படிபதில் சரியானதுதான்; ஏனெனில் வகுப்பு ஒற்றுமையோ அல்லது குறிப்பிட்ட ஒரு காரியத்தைச் சாதிப்பதற்காகவோ உபவாசம் ஏறகும் உத்தேசம் எனக்கில்லை. ஆயினும் பதில்பூர்த்தியானதல்ல,

தேகநிலைமையைமுன்னிட்டு உரிய காலத்துக்கு முன்னதாகவே நான் விடுதலை யடைந்தது முதல் இன்னொரு உபவாசத்தில் இறங்க வேண்டியிருக்கும் என்று எனக்குள்ளேயும் என் நண்பர்கள் சிலருக்கும் நான் சொல்லி வந்திருக்கிறேன். இதுவரையில் தெளிவற்றதாக விருந்தது, இப்போது தெளிவும் திட்டமான உருவமும் பெற ஆரம்பித்திருக்கிறது. ஆகவே என்னுடைய எண்ணத்தை இப்போது இன்னும் அதிக நண்பர்களுடன் பரிமாறி வருகிறேன்.

இப்பொழுது தகவல்எப்படியோ பத்திரிகைகளுக்கு எட்டிவிட்டது: ஆகவே நண்பர்களுடன் நான்பேசி வருவதன் விபரத்தைச் சரியானபடி பொதுமக்களும் அறிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

சத்தியாக்கிரகத் திட்டத்தில் உபவாசத்துக்கு உரிய ஸ்தானம் உண்டு. அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக்கொண்ட ஆயுதங்களில் அதுவே கடைசி ஆயுதம். பிராயச்சித்த முறையிலும், தன்னைத்தான் பரிசுத்தப்படுத்திக் கொள்ளுவதற்கும், கண்டனவகையிலும் உபவாசம் ஏற்படுகின்றது. என்னைச் சுற்றிலும் கட்டுப்பாடான முறையில் பலாத்காரம் கோரதாண்டவம் புரிவதைக் காணும்போது என்னுடைய அஹிம்ஸா தர்மம் கொதித்து எழுகிறது. அதுபல ரூபங்கள் எடுக்கிறது. ஒருவனுக்கு ஹிம்சையுண்டு பண்ணுவது எவ்வளவு பலாத்காரமோ அவ்வளவுக்குப் பொய் சொல்லுவதும் பலாத்காரமே! நம்மை ஆளுபவர்கள் புரியும் பலாத்காரத்தை மட்டும் நான் குறிப்பிடுவதாக எண்ணவேண்டாம். வெல்லமுடியாத அளவுக்குப் பலாத்காரம் தலைவிரித்தாடுவதாகத் தோன்றுவதால் அதிதீவிரமாக அஹிம்சாதருமத்தை அனுஷ்டிக்க வேண்டியது அவசியம் என்பதை நான் அறிவேன்.

உபவாசத்தில் எனக்கு எப்பொழுதுமே பிரேமை இடையாது. எனினும் பலதடைவைகளில் வேதனைப்படும் ஆத்மாவுக்கு அது நன்மை அளித்திருக்கிறது; ஏனெனில் உண்மையில் ஏற்படும் உண்ணாவிரதம் ஆத்மாவையும் ஆண்டவனையும் கலக்கச் செய்கிறது.

என் எண்ணத்தை வெளியிட்டு நண்பர்களுடன் விவாதித்து வருகிறேன்; இருளில் உழலும் எனக்கு வெளிச்சமும், வழியும் காட்டும்படி ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தித்து வருகிறேன், இது இல்லாமல் உபவாசம் ஏது? வெளிச்சத்தைத் தேடி அலையும் என்னுடைய பணியில் உலகிலுள்ள நண்பர்களின் ஒத்துழைப்பையும் நான் வேண்டுகிறேன்.

## "இற்றைய கல்வி முறையிலுள்ள குறைகள்"

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி பரிசளிப்புவிழாவின்போது கல்விமந்திரியார் டாக்டர் C. W. W கன்னங்கரா பேசியதாவது:—

"சென்ற நூறு வருஷங்களாக அரசாங்கம் எங்கள் கல்விமுறையிற் காட்டிய அசிரத்தைக்காகநான் குறைகூறுகிறேன். அரசாங்கம் வெளியிலுள்ளவர்களை இங்கு வந்து தாம் விரும்பியவாறு கல்வியூட்ட இடம் கொடுத்துள்ளது. இங்கு வந்த அந்நியருக்கு எம்பாஷைகளோ, ஒழுக்கமோ, வழக்கமோ தெரியாது; அவர்கள் எம்முறைகளைக் கண்டிக்கவுந்தலைப்பட்டனர். தேசிய முறையில் அவர்களுக்குக் கல்வியூட்டும்முறைதெரியவில்லை, தெரியவும் மாட்டாது. அவர்கள் செய்தது என்னவென்றால் ஒரு சில 'காலியான' உத்தியோகங்களை வழங்கவே நம்மவர்களைப் பக்குவமாக்கிவிட்டமைதான். அரசாங்கம் தனது கடமையை மற்றையோரிடம் ஒப்படைத்துவிட்டது. யான் ஒருபோதும் பாதிரிமாரைக் குறைகூறவில்லை. நானும் அவர்கள் நிலைமையில் இருந்தால் அவர்களைப்போலவே செய்திருப்பேன். இது முழுவதும் அரசாங்கத்தின தவறே. சனங்கள் அன்னிய பாதிரிமாருடைய பள்ளிக்கூடத்தில் கல்விபெறமுடியாமல் பாதிரிமாரைக் குறைகூறமுடியாமல் தவிப்பது பெரும் மோசம். ஸ்ரீலங்கா எல்லாத் தினசரிப்பத்திரிகைகளும் குறைகூறுவது வழமையே. ... இருந்தபோதிலும் சுதந்திரம் ... எனக்கு அவரையிட்டு அச்சமுமில்லை."

## ஒரே கருப்பத்தில் 5 குழந்தைகள்

### தாயும் சிசுக்களும் உடனே இறந்துவிட்டன

சிலாபம் அக் 25—

சிலாபத்தைச் சேர்ந்த அலுத்வத்தை என்னும் ஊர்வாசியான ஜேன் என்னும் பெண் ஒரே கருப்பத்தில் ஐந்து குழந்தைகளைப் பிரசவித்தாள். கடைசிக் குழந்தையைப் பிரசவித்தவுடனே தாய் இறந்துவிட்டாள். குழந்தைகளும் இறந்துவிட்டனவாம்.

### மன்னனின் பாட்டி மரணமானார்

விக்டோரியா மகாராணியாரின் கடைசிப் புத்திரி

லண்டன் அக் 26—

விக்டோரியா மகாராணியின் கடைசிப் புத்திரியும் மன்னர்பிரானின் பாட்டியுமான பிட்ரைஸ் இளவரசி தமது 87வது வயதில் இன்று காலமானார்.

யுத்தம் ஆரம்பித்தகாலந்தொட்டு கிராமப்புறத்தில் வசித்து வந்தார். இவரது ஒரே புத்திரியான ஸ்பெயின் பழைய ராணி தாயின் அருகில் இருப்பதற்காகச் செவ்வாய்க்கிழமை சுவிட்ஸர்லாந்திலிருந்து விமானத்தில் பறந்துவந்தாராம்,

## கஞ்சாவும் அபினும் சோரவியாபாரம்

### சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டார்

சென்றவாரம் மல்லாகம் நீதிஸ்தலத்தில் நீதிபதி மிஸ்ரர். வி. எப். குணரத்ன முன்பாக சோரமாக 212 ரூத்தல் கஞ்சாவையும் 37 ரூத்தல் அபினையும் வைத்திருந்ததாக வல்லுவெட்டித்துறை வாசியான ஐயாமுத்து—ஆறுமுகம் என்பவர்மீது தொடரப்பட்டிருந்தவழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்டது. முன்பே சட்டவிரோத பிறப்பிக்கப்பட்டிருந்த எதிரி சம்பந்தமில்லை கைது செய்யப்பட்டார். விசாரணையின்போது எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டமையினால் எதிரிக்கு ஒரு மாதக் கடுங்காவற் றண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார்,

### கோ அம்மாள் தேகவியோகமாயினர்

இணுவில் ஆஸ்பத்திரியின் வைத்தியதிகாரியாயிருந்து இளைப்பாறிச்சென்ற டாக்டர் இஸபெலா எச். கோ அம்மாள் அவர்கள் சென்ற அக்டோபர் 20ந் தேதி வெள்ளிக்கிழமை தமது ஜனனதேசமாகிய ஸ்கொத்லாந்திலே, அகாலமாக தேகவியோகமாயினரென அறியப்படுகின்றது.

# வகுப்பு வித்தியாசத்தை உடனே தவிர்க்கமுடியாது

வில்லூன்றி மயானக் கலகச் சம்பவத்தை யொட்டி வடமாகாண அதிபர் திரு. சி. குமாரசுவாமி யவர்கள், யாழ்ப்பாண நகரசபைத் தலைவராகிய திரு. க. பொன்னம்பலம் அவர்களுக்கு எழுதிய கடிதத்தையிட்டுச் சென்ற வெள்ளிக்கிழமை கூடிய நகரசபையின் விசேஷக் கூட்டத்தின்போது தலைவர் பேசியதாவது:—

"தாழ்த்தப்பட்ட ஒரு பெண்ணின் பிரேதத்தை வில்லூன்றியில் தகனஞ்செய்த நாளும் அதையிட்டு நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தாலும் யாழ்ப்பாணத்திலுள்ள தாழ்த்தப்பட்ட பகுதியினரில் ஒருசிலர் வில்லூன்றி மயானத்திலேயே தமது பிரேதங்களைத் தகனஞ்செய்ய எத்தனிக்கிறார்கள். தேச ஆசாரம் வழக்கம் உலகில் எங்கும் கடைப்பிடிக்கப்படுகின்றது. மனிதனுள்ளவரையும் இது இருக்கத்தான் செய்யும். வில்லூன்றியில் தகனஞ்செய்ய முற்படுவது தேசவழக்கத்தை எதிர்ப்பதாம். மகாத்மா காந்தி செய்து வந்த வழிமுறையை மக்களுக்கு சீக்கிரத்தில் பின்பற்ற முடியாது. அதற்காகத் தமிழராகிய எம்மவர்கள் சாதிபேதமற்ற ஒருமைப்பாட்டுடன் சம உரிமை வழங்குவார்கள் என்று பழித்தலும் தூற்றலும் தவறாகவாம். தாழ்த்தப்பட்டவர்களுக்கு மற்றவர்களைப் போலச் சம உரிமையை வழங்க விரும்பினாலும் அவர்களுக்கு ... எனக்கு ... தெரிந்த தாழ்த்தப்பட்டவர்களுடைய இரு கோயில்களுக்குள் அவர்கள் தாமே உட்புகாது விட்டிருக்கிறார்கள். தங்கள் ஆதீனத்திலுள்ள கோவில்களுக்குப் போகாது விட்டிருக்குமவர்களின் நிலைமையைக்கொண்டே உயர்ந்தசாதியினர் அவர்களைத் தாழ்த்திவைக்கவில்லை யென்பது வெளிப்படையல்லவா?

எல்லாருக்கும் பொருத்தமான ஒரு மயானத்தை ஒருநாளையில் ஏற்படுத்தமுடியுமா? அதேபோல நீண்டகால வழமையை ஒருநாளில் அகற்றமுடியுமா? வழமைக்கு மாறாக ஒருவர் சந்நிதியில் ஒன்றை ஏற்படுத்தி சமாதானபங்கம் ஏற்பட்டாலும் ஏற்படுமல்லவா? வரிப்பணத்தைக் கொண்டு நகரசபை ஏற்பாடு செய்ய வேண்டியது ஒரு மயானமே, அதற்குத்தானே நகரசபையின் எல்லைக்குள் பொதுமுறையில் அரசாங்கத்துக்குச் சம்மதமாக இருக்கிறது.

ஆயினும் நாம் கூடியவிரைவில் எல்லாருக்கும் பொதுவானதும் சம்மதமானதுமான ஒரு மயானத்தை ஏற்படுத்துவோம். இதற்காக மேல் அதிகாரிகளுடைய ஆதரவையும் கேட்டுள்ளேன்."

இக்கூட்டத்தின்போது வடமாகாண அதிபர் திரு. சி. குமாரசுவாமியும் சமூகமாயிருந்தார்.

இற்றில் தொற்றுநோய் ஆஸ்பத்திரிக்குச் சமீபமாகவுள்ள ஓர் இடத்தில் ஒரு பொது மயானத்தை ஏற்படுத்துவதாக நகரசபையார் தீர்மானித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஹு
ஐப்பசிமீ கசஉ திங்கட்கிழமை


## வில்லூன்றி மயான விவகாரம்

சென்ற வெள்ளிக்கிழமை(27-10.44) நடைபெற்ற யாழ்ப்பாணப் பட்டின சங்க விசேஷ கூட்டத்தில் வில்லூன்றிக் கணித்தாகவுள்ள தொற்றுநோய் வைத்தியசாலைக்குச் சமீபத்தில் எல்லாச் சாதியினரும் பேதமின்றித் தகனஞ்செய்தற்காகிய ஒரு மயானம் வகுக்கப்படவேண்டு மென்ற நிர்ணயம் நிறைவேற்றப்படலாயிற்று. வில்லூன்றி மயானத்திற கலகம் நேர்ந்த அன்று தொடக்கம் இற்றைவரையில் யாழ்ப்பாணப் பட்டினசங்கத் தலைவராகிய திரு. க. பொன்னம்பலமவர்கள் கையாண்டுவந்த முறையுங் கொள்கையும் சாலவும் பாராட்டற்பாலன. இங்குள்ள சில பொறுப்பற்ற அங்கத்தவர்கள் அதிகாரிகள போலி அபிமானிகளின் நோக்கங்களைத் திரு. பொன்னம்பலம் அவர்களும் பின்பற்றிக் கருமமாற்றத் தலைப்பட்டிருப்பரேல் பல அனர்த்தங்கள் நேர்ந்திருத்தல் கூடுமென நாமெண்ணுவது தவருகாது.

இப்பட்டினசங்கத் தலைவர் இந்தச் சந்தர்ப்பத்தில் தமது நியாயங்களை எடுத்துக்காட்டி வெளியிட்ட பத்திரம் மிகவும் ஆராய்ச்சியோடும் நுட்பத்தோடுங் கூடியது; அதன் மொழிபெயர்ப்பு இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டுள்ளது. சாதி சமயக் கட்டுப்பாடுகளும் பழக்கவழக்கங்களும் தொன்மையான கொள்கைகளும் உலகத்திலே எல்லாச் சமயத்தவர்க்கும் சாதியார்க்குமிடையில் ஏற்ற ஏற்ற முறையில் எங்கு முண்டென்பது திரு. பொன்னம்பலமவர்கள் எடுத்துக்காட்டிய பிரகாரம், எவராலும் மறுக்கமுடியாதது. காலங்கண்டனவாகிய இக் கட்டுப்பாடுகளையும் ஆசாரங்களையும் நினைத்தவுடனே மாற்றிவிடுதலும் இலகுவான கருமமல்ல; இந்தியாவைப் பற்றி இங்குஞ் சிலர் தாழ்ந்த சாதியாரென விரும்போலைத் "தாழ்த்தப்பட்ட" சாதியாரெனப் பெயரிலையில் வைத்துக்கூறத் தலைப்பட்டுக்கொண்டனர். இதில யாரை யார் தாழ்த்தினது என்பதை இங்குள்ள பொறுப்பற்ற போலியபிமானிகள் தக்க ஆதாரத்தோடு எடுத்துக் காட்டுகின்றிலர்.

இந்தத் தமிழ்நாட்டிலே பிராமணன் முதல் துரும்பன் ஈருக எல்லாரும் தத்தம் வருணச்சிரமத்திற்குக் கட்டுப்பட்டே நடக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள்; பலர் அப்படியே நடந்தும் வருகிறார்கள்; தாழ்ந்த சாதியாருக்கிடையேயுள்ள கட்டுப்பாடுகள் உயர்ந்த சாதியினரென் றிருப்போர்க்கிடையேயுள்ள கட்டுப்பாடுகளைக் காட்டிலும் அதிகமானதென்று கூறல் தவறுகாது; குடிமக்களுள் நாவிதனுக்கும் வண்ணானுக்குமிடையேயுள்ள கட்டுப்பாடும் தொடர்பும் பலவுண்டு; ஆனால் மேல்சாதியினரெனவிருப்பேர் இருவகைக் குடிமக்களையும் ஒருவிதமாகவே மதித்துக்கொள்ளுகிறார்கள்; பள்ளர் நளவருக்குமிடையே வேற்றுமையான கொள்கைகளும் கட்டுப்பாடுமுண்டு; சேவிக்கும் பறையருள்ளும் வேளாளருக்குச் சேவைசெய்யும் பறையர் வேறு, ஏனைய சாதியினர்க்குச் சேவை செய்யும் பறையர் வேறு என்ற பேதங்களுண்டு; பிராமணர்களுள்ளே மூலஸ்தானத்திற் சென்று பூசை செய்தற்காகிய பிராமணருமுண்டு; அங்கே செல்லவும் பூசைசெய்யவும் அருகரல்லாப் பிராமணருமுண்டு; அந்த அந்த நாட்டின் பழைய கொள்கைகளையும் பழக்கவழக்கங்களையும் ஆராயப்புகுந்தாலன்றி, பொறுப்பற்றவர்களாய்ச் சுயநலம்பற்றிக் கலகங்களை மூட்டிவிட்டு வேடிக்கை பார்க்க விரும்போர்க்கு இவைகள் புலப்படா.

இனி, "கட்டுப்பாடு" என்ற இந்தச் சொல் எப்படியாராய்ந்தாலும் நல்ல கருத்துடைய சொல்லாகவும், அறிவுடையோரால் ஒவ்வொரு நோக்கம் பற்றி வகுக்கப்பட்ட பிரமாணங்களைக் கொண்டதாகவும் இருக்கின்றது; மனக் கட்டுப்பாடு; பொருட் கட்டுப்பாடு, சாதிக்கட்டுப்பாடு, சமயக் கட்டுப்பாடு, இக்காலத்திலே உணவுப்பொருட் கட்டுப்பாடு' உடைக்கட்டுப்பாடு, செல்வுக் கட்டுப்பாடு, விலைக்கட்டுப்பாடு முதலிய எத்தனையோ கட்டுப்பாடுகளுண்டு. இக்காலத்துக் கட்டுப்பாடுகளும யுத்த நிலைமையை அநுசரித்து அரசினரால் தக்க ஆராய்ச்சியோடும் ஆலோசனையோடுஞ் செய்யப்பட்டன. இந்தக் கட்டுப்பாடுகளுட் சாதிக்கட்டுப்பாடொன்றை மாத்திரந் தவிர்த்துக்கொண்டு, ஏனைய கட்டுப்பாடுகளையெல்லாம் அரசினரும் ஊரவர்களும் கைக்கொண்டு வருவதற்குக் காரணந்தான் என்னையோ?

இவைகிடக்க, தாழ்ந்த சாதியினரும் தங்களுட் சில கட்டுப்பாடுகளை வைத்துள்ளார்களென்பதற்குத்திரு.பொன்னம்பலமவர்கள் எடுத்துக் காட்டிய நியாயம் தக்கது. அதாவது யாழ்ப்பாணப் பட்டின எல்லையுள் தாழ்ந்த சாதியினரால் நிர்வகித்து நடத்தப்படும் இரண்டு கோயில்களுண்டென்றும் அக்கோயிலுக்குள் அவர்கள் பிரவேசிப்பதுமில்லையென்றும்பட்டினசங்கத்தலைவர் கூறியுள்ளார்; பட்டின எல்லைக்குள் மாத்திரமல்ல, நாட்டுப் புறங்களிலே தாழ்ந்த சாதியாரால் நிர்வகித்து நடத்தப்படும் கோயில்கள் பலவுண்டு; வட்டுக்கோட்டையில் திமிலரெனப்படும் மக்களால் நடத்தப்படும் சிவன்கோவிலொன்றுண்டு; அக்கோயிலுக்குப் பூசைசெய்வோர் பிராமணர்; ஆனால் திமிலர்கள் தங்களுக்குரிய வீதியிலே நின்று வணக்கஞ் செய்வார்களேயொழிய உள்ளே பிரவேசிக்கமாட்டார்கள். உயர்ந்த சாதியானாக, தாழ்ந்த சாதியானாக, எவன் தனதன் சாதசமயக் கட்டுப்பாட்டுள் அடங்கி நடக்கிறானே அவனே எல்லாராலும் மதிக்கப்படுவான். உயர்ந்த சாதியாருக்குத் தாழ்ந்த சாதியாரின் சேவை வேண்டும்; தாழ்ந்த சாதியாருக்கு உயர்ந்த சாதியாரின் உதவி வேண்டும். உயர்ந்த சாதியார் தாழ்ந்த சாதியாரைத் தம் மக்கள்போல் மதித்து நடத்திவந்தார்கள்; குடிமக்கள் என்பதிலும் மக்கள் என்ற சொல்லில் ஒரு அன்பிற்கு அக்கருத்துத்தொனிக்கின்றது.

தாழ்ந்த சாதியினருக்கெனப் பிரத்தியேகமான இரண்டு சுடலைகள் பட்டினவெல்லையில் இருக்கின்றனவென்பதைப் பட்டினசங்கத் தலைவரே தமது பத்திரத்தில எடுத்துக்காட்டியுள்ளார், அதனைவிடுத்து வில்லூன்றிச் சுடலையில் தாழ்ந்தசாதிப் பிரேதத்தைக் கொண்டுவந்து தகனஞ் செய்துவிட்டால், அந்தத் தாழ்ந்த சாதியாரெல்லாரும் உயர்ந்த சாதியாராய்விடுவாரா? பிராமணரும் வேளாளரும் ஒரே மயானத்திற் றான் தகனஞ் செய்வது வழக்கமாகும்; இதனால் அந்த வேளாளரெல்லாம் பிராமணராய் விடுவார்களா? மேலும் அடாதகருமங்களைச் செய்து சமத்துவம் பெறலாகுமா?

வில்லூன்றி மயானமும் தீர்த்தக் கேணியும் மடமும் பொருந்தியுள்ள நிலம் முழுவதும் வண்ணார்பண்ணை வைத்தியேசுவர சுவாமிக்குரிய ஆதனமென்றும், அக்காலத்திலுள்ள மேற்படி கோயிலதிகாரிகள் அவற்றை மேல் சாதியாரின் உபயோகத்தின் பொருட்டு வகுத்துவிட்டார்களென்றும் காலங்கண்ட முதியோர் சொல்லுகிறார்களே, கோம்பயன்மணல் மயானத்தை உதவிய பெரியாரின் வழித்தோன்றல்கள் இப்பொழுதும் வண்ணார்பண்ணையில் இருக்கின்றார்களாமே! இவைபொய்யா! நிசமா!

யாழ்ப்பாணப் பட்டின எல்லையிலுள்ள கோம்பயன்மணல், வில்லூன்றி யென்னுமிரு மயானங்களைப்பற்றிய விவகாரங்கள் முந்தியும் நேர்ந்துள்ளன வன்றே. அக்காலங்களில் இங்குள்ள மாகாணத்தலைவர் முதலிய மேலதிகாரிகள் செய்த கட்டுப்பாடுகளைப் பற்றிய விபரமொன்று இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இந்த யாழ்ப்பாணத்திலே தொன்றுதொட்டு உயர்ந்தசாதி மக்கள், தாழ்ந்த சாதிமக்கள் எவ்வகையான வேற்றுமையுமின்றித் தாய் பிள்ளை சகோதரங்கள்போல் பரஸ்பரம் ஒற்றுமையாக தங்கள் தங்களுக்குரிய ஆசார அநுஷ்டானங்களில் திறம்புதலின்றி வாழ்ந்து வந்தார்கள்; பிற்காலத்தில் அந்நிய சமயத்தினர் சிலர் காலந்தோறுஞ் செய்து வரும் தூண்டுதலினாலும், இலங்கையின் ஏனைய பாகத்திலிருந்து இங்கு மிகவும் பிற்காலத்தில் வந்துசேர்ந்த அந்நிய சாதியினர் சிலரினுஞ் சிலர் தம் நயங்கருதி விளக்கத் தலைப்பட்ட மித்திர பேதத்தினாலும், பழைய தமிழர் கொள்கைகளையெல்லாம் வெறுத்தொதுக்கி நவநாகரிகமுறைகளைக் கைக்கொண்ட சாதியபிமானம் சமயாபிமானங்கெட்ட ஒருசிலரின் துர்ப்புத்தியினாலும் உந்தப்பெற்ற தாழ்ந்த வருணத்தவருட் சிலர் இடையிடையே அடாதசெயலைச் செய்யத் தலைப்பட்டுள்ளனர். தாழ்ந்த சாதியார் தங்களுக்கு இன்னார் யார் இனியார் யார் என்ற பேதத்தையுணர்ந்து இன்னார் சொல்வதைத் தவிர்த்து இனியார் சொற்கேட்டு நடக்கத் துணிவரேல் இப்படியான பிணக்குகள் எக்காலத்தும் நேரமாட்டாவென்பது நிசம்.

## கோம்பையன் மணல் வில்லூன்றி மயானங்கள்

"கோம்பயன் மணல் மயான காரியதரிசி திரு. சு. நடராசா, யாழ்ப்பாணப் பட்டினசபைத் தலைவருக்கு அனுப்பியிருக்கும் கடிதமொன்றில் தெரிவித்திருப்பதாவது: 1902ம் வருடத்திய அரசாங்க கெஜற் பத்திரிகையில் பிரசுரித்திருக்கும் பிரகடனத்தின்பிரகாரம் வில்லூன்றி மயானத்தை உயர்ந்த ஜாதி இந்துக்கள் மாத்திரம் தகனக் கிரியைகளுக்கு உபயோகப்படுத்தக்கூடும். தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் வில்லூன்றி மயானத்தின் ஒரு பிரத்தியேகமானபாகத்தை பிரேத அடக்கங்களுக்கு மாத்திரம் உபயோகித்துக்கொள்ளலாமேயொழிய அதைத் தகனக் கிரியைகளுக்கு உபயோகப் படுத்தலாகாது. மிஸ்றர். ஈ. டி. டைசன் வடமாகாணத் தலைவராக இருந்தபொழுது அவரால் பிறப்பித்துள்ள கீழ்க்கண்ட உத்தரவுப் பத்திரம் ஒன்றையும் திரு. ச. நடராசா யாழ்ப்பாணப் பட்டினசபைத் தலைவருக்கு அனுப்பியிருக்கிறார்:- "வண்ணார்பண்ணையில வசிக்கும் நளவர்களில் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் கோம்பையன மணல் மயானத்தின் ஒரு பிரத்தியேகமானபாகத்தில் தங்களுடைய பிரேதங்களை அடக்கம் செய்து கொள்ளலாமேயொழிய அவைகளை அங்கே தகனஞ் செய்யக்கூடாது. பிரமாணத்தின் பிரகாரம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்கள் பிரேதங்களை ஊர்காவற்றுறை றோட்டிலுள்ள துக்குமரக் காட்டில் தகனஞ் செய்துகொள்ள வேண்டுமென்பதாகவும் அவர்கள் தங்களுடைய பிரேதங்களைக் கோம்பையன் மணல் சுடுகாட்டின் எந்தப் பாகத்திலும் தகனஞ் செய்து கொள்ளுவது சட்டத்துக்கு விரோதமான செய்கை யென்பதாகவும் திரு. டைசன் தமது உத்தரவில் குறிப்பிட்டிருக்கிறார்."

## சரோஜினி தேவியின் தீபாவளி வாழ்த்து

### ஜோதி அணையாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்

பம்பாய் அக் 22—

பம்பாயைச் சேர்ந்த பிரபமாணவ ஊழியர் ஒருவருக்குச் சரோஜினி தேவி கீழ்க்கண்ட தீபாவளி செய்தியை அனுப்பியிருக்கிறார்.

'விளக்குத் தங்கத்தால செய்திருந்தால் என்ன களிமண்ணால் செய்திருந்தாலென்ன கமக்கு வேண்டியது இருளை அகற்றும் வெளிச்சந்தானே. அதேபோல மாணவர்கள் யாராயிருந்தாலும் கடும்புயலிடையே ஜோதி அணையாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தாலதான் உலகில அமைதி நிலவிவரும்.

## சரசுவதியின் காதல்

### "நானாகவே போனேன்"

சென்றவாரம் யாழ்ப்பாணம் கீழ் நீதிதலத்தில் ஜே. ஈ. வ. அலெஸ் முன்பாக ஆனைக்கோட்டை வாசியான அப்பாக்குட்டிசரவணமுத்து என்பவர்மீது அவ்வூர் வாசியான பொன்னுத்துரையின் மகள் சரசுவதியை அவளது பெற்றோரது பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்றதாகக் குற்றஞ் சாட்டி பொலிஸ் சார்ஜண்ட் இ. ஜே. குணவர்த்தனா ஓர் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

வழக்காளி சார்பாக திரு. கே.வி. சின்னத்துரையும், எதிரியின் சார்பாக திரு. சாம், வ, சபாபதியும் ஏற்பட்டனர்.

அப்போது குறித்த மங்கையின் தமையனாகிய பொன்னுத்துரை. பரமலிங்கம் கூறியதாவது:-

'சென்ற 15ந் திகதியன்று விடியற்புறம் 4 மணியளவில் நான நித்திரையாக விருந்தபோது, எனது தாயார் சின்னப்பிள்ளை தமது மகளைக் காண வில்லை யெனச் சத்தமிட்டார். அதனைக்கேட்ட நான எழுந்து அவ்விடமெல்லாம் தேடினேன. காணவில்லை, வண்டியில போவதாகக் கேள்வியுற்றுப் பொலிசாரது உதவியுடன வட்டியடைப்பிலுள்ள ஒரு வீட்டில் எனது சகோதரியையும கண்டோம், பொலிசார் இருவரையும் கைதுசெய்து சகோனைப் பொலிஸ்தானத்துக்குக் கொண்டு போனார்கள்.'

### சரசுவதியின் சாட்சியம்

பின்னர் 17 வயதுடைய சரசுவதியின சாட்சியம் வருமாறு:-

"எனது தாயின் பெயர் சின்னப்பிள்ளை. நான் எனது தாயாருடனும் சகோதர—சகோதரிகளுடனும மானிப்பாயில வசித்து வந்தேன. எனது தகப்பன எங்களுடன வசிப்பதில்லை. சென்ற 15ந் திகதியன்று இரவு 9 மணி வரையும் தைத்துக்கொண் டிருந்தேன. அப்பால படுக்கைக்குப் போய்விட்டேன்.

சம்பவம் நடைபெற்ற அன்று விடியற்காலை நாங்கள் ஏற்கெனவே செய்துகொண்ட ஒழுங்கின்படி எனது காணிக்குள் ஓரிடத்தில் எதிரியைச் சந்தித்தேன. நான் அவ்விடத்திற்கு வருவதாக அதற்கு முன் பொறநடியில எதிரியைச் சந்தித்தபோது சொல்லியிருந்தேன. நாங்கள இருவரும் நடந்து வட்டியடைப்பு என்னுமிடத்திலுள்ள சின்னப்பு என்பவரது வீட்டிற்குச் சென்றோம். எதிரி அங்கிருந்து என்னை வேறொரு வீட்டிற்குக் கொண்டுபோனார். அவ்வீட்டிலே தான சங்கானைப் பொலிசும சவகானை விதானையும் எங்களைக் கண்டு கைதுசெய்தார்கள். எதிரியுமநானும் ஒரேகாணியில வெவ்வேறு வீட்டில் வசித்து வந்தோம. எதிரி என்னை கூட்டிச் செல்லுதற்கு முன்னரும எதிரியுடன சந்தோஷமாகக் கூடியிருந்தேன. நான வேளாள வகுப்பைச் சேர்ந்தவள். எதிரி மேட்டுக்குடிச் சாதியைச் சேர்ந்தவர். இன்னமும் எதிரியை மணமுடிக்க விருப்பம் கொண்டுள்ளேன்."

நீதிபதி எதிரியைப் பிணையில் விடுத்து சரஸ்வதியை இரட்சணிய சேனையிலிருக்க உத்தரவிட்டு வழக்கை வருகிற நவம்பர்மாதம் 6ந் திகதிக்குத் தவணையிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியாரின் கவிப்பண்பு

வி. கே. பி. என்.

(முற்றொடர்)

## உவமைச் சிறப்பு

'உவமைக்குக் கவிகாளிதாஸனே' என்று வடமொழியில் ஒரு தொடர் உண்டு. பாரதியாரின் உவமைகள் மிகவும் அழகு வாய்ந்தனவாயும், யாவரும் அறிந்துகொள்ளக் கூடியவையாயும் இருக்கின்றன. இதற்கு உதாரணம் கூறப்புகுந்தால் அவர் கவிதைகளின் பெரும்பாகத்தை இங்கு எழுதவேண்டி வரும். அவர் காதலையும், காதலியையும் ஒளிக்கும், விழிக்கும், வீணைக்கும், வீரத்திற்கும், வேதத்திற்கும், மயிலுக்கும், நிலவுக்கும், கடவுளுக்கும் உவமித்திருப்பதை நினைப்பூட்டுவதே போதுமென்றெண்ணுகின்றேன்.

கௌரவர் கட்டிய மண்டபத்தை

''வல்லவனொருவன் சித்திரம்<br>போலும்<br>வன்மைக் கவிஞர் கனவினைப்<br>போலும்<br>நல்ல தொழிலுணர்ந் தார்செய<br>லென்றே<br>நாடுமுழுதும் புகழ்ச்சிகள் கூற''

0 0 0

சொல்லை யிசைத்துப் பிறர் செயு<br>மாறே<br>சுந்தர மாயொடு காப்பியஞ் செய்<br>தார்''

என்று கூறுவது கற்றவர் உளங் கவர்தற்குரியதாகும். கண்ணபிரானருளால் திரௌபதியின் துகில் வளர்ந்ததை!

''பொய்யர்தந் துயரினைப்போல்<br>—நல்ல<br>புண்ணியவாளர் தம் புகழினைப்<br>போல<br>தையலார் கருணையைப்போல—<br>கடல<br>சலசலத் தெறிந்திடும் அலைகளைப்<br>போல்

0 0 0

வளர்ந்தன, வளர்ந்தன, வளர்<br>ந்தனவே''

என்று கூறுகின்ற இடத்திலும் உவமைகள் ஒப்பற்று விளங்குகின்றன.

இன்னும் சாதாரணமாக வழங்கும் பழமொழிகளும், அவைபோன்ற சொற்றொடர்களும் பாரதியார் பாடல்களிற் பரக்கக் காணப்படுகின்றன:—

''காற்றுள்ளபோதே நாம் தூற்றிக்கொள்வோம்

0 0 0

பண்டாய்ச்சி ஔவை 'அன்னை<br>யும் பிதாவும<br>பாரினில் முன்னறி தெய்வ'<br>மென்றனளே

0 C 0

பனிகண்டவனைத் தோலுரிக்கக்<br>காத்திருப்பளே

0 0 0

செருப்புக்கு மேல்லும் கிழவிக்<br>கிளிதோர்<br>அவலாய் முண்டது''

என்பன சில திருஷ்டாந்தங்கள்.

## பாரதியும் பண்டிதர்களும்

பாடல்களிலெல்லாம் வர்ணனைகள் உள்ளது உள்ளபடியே அமைந்திருக்க வேண்டும் என்பது ஒரு சில பண்டிதர்கள் அபிப்பிராயம். இப்படிப்பட்ட ஆராய்ச்சிக்காரர்களுக்கு உண்மைக் கவிஞர்களின் மனோபாவம் எப்படிப் பிடிக்கும்? விளங்கத்தான் செய்யுமா?

''செந்தமிழ் நாடெனும் போதி<br>னிலே—இன்பத்<br>தேன்வந்து பாயுது காதினிலே''

என்ற பாரதிபாட்டையே எடுத்துக்கொள்வோம், ''தேன் வந்து காதில் பாய்ந்தால்'' எவ்வளவு தொந்தரவாயிருக்கும்! வாயில் பாய்ந்தாலல்லவா ருசியாயிருக்கும்! மேலும் ''செந்தமிழ்நாடு'' என்று சொல்லிவிட்டால் தேன் வரப்போவதுமில்லை! வெறுஞ்சொல்லுக்குத் தேன் கிடைக்குமா? காசுகொடுக்கவல்லவா தேன் வாங்கமுடியும்? எனவே இந்த வர்ணனை எதார்த்தமன்று; முழுப் பொய்! என்று ஒருசில பண்டிதர்கள் சித்தாந்தம் செய்யலாமல்லவா? அப்படியானால்,

''அண்ணனுனவன் தம்பிக்கு<br>மூத்தவன்<br>திண்ணையானது தெருவிலுயர்ந்<br>தது<br>கண்ணனென்பவன் கண்ணிரண்<br>டுள்ளவன்<br>வெண்ணெயென்பது பாலில்<br>விளைவதே''

என்று பாடுவதுதான் பாட்டாகும்.

''பாக்காவது கமுகம் பழம்<br>பருப்பாவது துவரை''

என்று பாடுவதும் உள்ளபடியே பாடுவதுதான்!

நாற்காதமும் முக்காதமும்<br>நடந்தால் எழுகாதம்.'

என்று பாடினால் அந்த உண்மையைக் கணிதசாஸ்திரம் கூட மறுக்கமுடியாது.

ஆனால் கணிதசாஸ்திர உண்மைகளும் விஞ்ஞான சாஸ்திர உண்மைகளும் பாட்டாகுமா? கவிதையுலகில் உண்மையென்பது சௌந்தரிய உணர்ச்சியோடும், மனோபாவத்தோடும், ஓசையின்பத்தோடுமல்லவா பிறக்கவேண்டும்?

சொற்களில் இல்லாத இன்பம் சொற்களிடையே பெருக்கெடுத்தோடும்படி சொற்களைச் சேர்த்துவிடுகிறான் கவிஞன். இதுவொரு மந்திர வித்தையைப் போன்றது. ஆம்—கவிஞன் ஓர் அற்புத மந்திரவாதி; மனோபாவம் என்ற மாத்திரைக்கோலைச் சிருஷ்டியுற்சாகத்தோடு உயர்த்துகிறான், உடனே வார்த்தைகள் வந்துவிடுகின்றன ஓசையின்பத்தோடு—இவன் சிரமப்பட்டு நிகண்டுகளிலிருந்தும் அகராதிகளிலிருந்தும் சொற்களைத் தேடிப்பிடித்துக் கோத்து வைப்பதில்லை. சில சாதாரணமான தமிழ்ச்சொற்களே போதும், கவிதா ரத்தினமாகப் பிறவியெடுப்பதற்கு.

## பாரதியும் பெண்களும்

பாரதியார் பாடல்கள் பெண்குலத்திற்கே ஒரு வரப்பிரசாதமென்று சொல்லலாம். சக்தியையே வழிபட்டு வந்தவராதலால், உலகிலுள்ள பெண்மணிகள் எல்லோரையும் தம் தாயெனவே கருதினர்.

''மனைவி ஒருத்தியை<br>அடிமைகொளவேண்டித்<br>தாய்க்குல முழுதும்<br>அடிமைப்படுத்திடலாமோ?''<br>என்று கேட்கின்றார்.<br>பெண்கள் விடுதலையில்,<br>''மாட்டை யடித்து<br>வசக்கித் தொழுவினில்<br>மாட்டும் வழக்கத்தைக்<br>கொண்டு வந்தே,<br>வீட்டினில் எம்மிடம்<br>காட்ட வந்தார்; அதை<br>வெட்டி விட்<br>டோமென்று கும்மியடி''

0 0 0

''கற்பு நிலை என்று<br>சொல்ல வந்தார்; இரு<br>கட்சிக்கும் அஃதைப்<br>பொதுவில் வைப்போம்!''

என்ற வரிகளைப் படிக்கும்பொழுது எந்த மனிதனுக்குத்தான் நெஞ்சு உருகாது?

''புதுமைப் பெண்'' ''பெண்மை'' என்ற கவிதைகளிலே அவரது நெஞ்சிலிருந்து கவிதைகள் ஆவேசத்துடன் எழுகின்றன. ''நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்! விலகிவீட்டிலோர் பொந்தில் வளர்வதை, வீரப்பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்!'' என்ற சொற்கள் வீரமற்ற பெண்களுக்குக்கூட வீரமளித்து உற்சாகமூட்டுகின்றனவல்லவா?

## இலக்கிய வீரன்

பாரதியார் ஓர் இலக்கிய வீரன். இலக்கியவீரன் எல்லோரிலும் பெரியவீரன். அவனுடைய சக்தி, போரில் உபயோகப்படும் ஆகாயக் கப்பல்கள், டாங்கிகள், நீர்மூழ்கிகள், மூழ்க்கும் வெடிவீச்சுக் கப்பல்கள் ஆகிய இவையெல்லாவற்றின் சக்தியையும் மிஞ்சியது. நாம் நம்நாட்டில் இலக்கிய வீரர்களைப் பிறப்பிக்காமற் பாவோமாயின், எல்லாச் சாதனங்களிலிருந்தும் நாம் உபயோகமற்றவர்களாகவே இருப்போம்.

தமிழ்த்தாயின் தவப்பயனாக அவதரித்த பாரதிக்கு உலகின் உயர்ந்த இலக்கிய கர்த்தாக்களிடையே சமஇடம் உண்டு. அவர் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவிகொண்டு'' 'தெள்ளுற்ற தமிழமுதின் சுவை'' காணும்படி, 'இறவாத புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றி'த் தம் தாய்மொழிக்குப் பணியாற்றிச் சென்றார். சங்கு பெருமானுக்கு நாம் செய்யக்கூடிய கைம்மாறெல்லாம் அவரது ''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை'' செய்தலே! அன்னை பராசக்தி நமக்கு அருள் புரிவாளாக!

## மரணமும் மறுமையும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரித்துக் கொள்ளாது நம்மைத் தூய்மைப்படுத்துவதற்குரிய கடமைகளைக் கவனிக்கவேண்டும். அவை:

ஓதியுணர்தல், பிறவுயிர்களின் மீது அன்புடைமை, பிறர் பொருளைக் கவராதிருத்தல், சமூக தேச நலத்திற்காக வுழைத்தல், தமிழ்மொழி வளர்ச்சிக் குதவி புரிதல், ஏழைகளைப் பாதுகாத்தல். ஒருவன் தன்னை எவ்வளவுக் கெவ்வளவு தூய்மைப்படுத்துகின்றானோ அவ்வளவுக் கவ்வளவு மரணபயமின்றி வாழலாம். தீயவழியில் நிற்போர் அலசரீரத்தை விட்டபின் இயமதர்மனென்னும் கடவுளால் கைப்பற்றப்பட்டுத் தமது பாவங்களுக்கேற்ப தண்டனைகளை அனுபவிப்பர். புண்ணியம் செய்தோர் இன்பமனுபவிப்பர்.

தாய்வயிற்றிற் கருக்கொண்டு பிறக்கும் மகவு ஒவ்வொன்றும் வெவ்வேறு தன்மையதாக இருப்பதன் காரணம் என்ன? ஒன்று தான் பிறந்த குடும்பத்தால் வறுமையடையவும் ஒன்று செல்வவளம் பொருந்தி இடையறாது இன்பந்துய்த்தலும், ஒன்று கல்வியறிவு உடையதாய் பலரால் புகழப்படுவதும் ஒன்று தீயறிவுடையதாய் இகழப்படுதலும் பாங்கனமென ஆராயின் அது பண்டுதொட்டு அமைந்த பாவபுண்ணியமாகும். இவ்வுண்மையறிந்தே பெரியாரும்

''பேறிழவின்ப மோடு பிணி மூப்<br>புச் சாக்காடென்னும்<br>ஆறுமுன் கருவுட்பட்ட தவ்விதி<br>யனுபவத்தா<br>லேறிடு முன்பு செய்த கன்மமிங்கித<br>னுக் கேது<br>தேற நீயினிச்செய கன்மமேலு<br>டற சேருமன்றே''

என்று அருளிச் செய்தார்,

பிறவிகள் ஒரு ஏணிப்பலகைக்குச் சமானமாவை மானிடப்பிறப்பே மறுபடியும் அமையுமென்று துணிபு கொள்ளமுடியாது.

அநேக இழி பிறவிகளிலிருந்து நல்வினையின் சார்பாக அதிக உச்சத்திலுள்ள இப்படியை யடைந்தோம், இப்பிறவியிலேயே இனிமேல் பிறவாப் பெரும்பேறு பெறலாம். அதற்கு வழி நல்வினை செய்தல்வேண்டும், சிவனை அர்ச்சித்து பிறவிப்பிணி கடலை நீந்திக் கரையடையும் வகையறிந்து நிற்றல் முறையாகும்.

இற்றில் மரணமென்பது ஒரு வீட்டிலிருந்து மறுவீட்டிற் குடியிருக்கப்போவதுபோன்ற நிகழ்ச்சியெனல் பொருந்தும். திவசதினங்களில் உபவாசமிருந்து பிதிர்களின் சார்பாக இறைவனை வேண்டுதல் செய்தலே முக்கியமானது.

முற்பிறவியில் செய்த தீவினைகளால் இப்பிறவியில் எய்துந் துன்பங்களை ஞானமார்க்கத்தாலும் பக்தி ஒழுக்கத்தாலும் துடைத்துக் கொண்டால் இனிவரும் பிறவியில் இன்புறுதல் ஒருதலையாமன்றோ? காலமென்னும் கழுகானது நம்வாழ்நாளை உண்டு தொலைத்துவிட மரணம் என்னும் இயமனால் வகைதெரியமன்றோ. ஆகவே இவ்வுண்மைகளை யறிந்து பாவத்தொழிலைச் செய்யாது பூதவுடம்பு கழிந்த பின்பும் புகழுடம்பு நிலைபெற்றிருத்தல் வேண்டும்.

வியாபாரத்திற்கழகு

விளம்பரஞ் செய்தல்

மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

டாக்டர். எஸ். சி. பாலின் ''சாந்தன் றக்ஷா''

அகாலப் பிரசவத்தை முற்றாகத் தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதாரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்ட தைலம்.

டாக்டர். எஸ். சி. பாலின் ''சாந்தன் றக்ஷா'' கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஆரம்பத்திலேயே பரிதாபகரமான வியாதிகளாகிய வாந்தி, (காலை வியாதி) முதலியவற்றை தடுத்து மற்றும் நாட்சென்ற கர்ப்ப வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல் இரத்தக் கசிவைக் கட்டுப்படுத்தி, கர்ப்பக்குடலிலிருந்து இரத்தக்கறையையும் பல சிக்கல்களையும் கற்பப் பையில் புகுந்து அதனிமித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டுபண்ண விடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படி தைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம், மாதரின் கர்ப்பகாலங்களில் இத்தைலம் விலைமதிக்கத் தகாத ஒரு வரப்பிரசாதமாகும். நூற்றுக் கணக்கான எதிர்பாராத சிபார்சுக் கடிதங்கள் பார்வைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டார் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர், எஸ். சி. பால் அண்டு சன்ஸ், கல்கத்தா.

ஏக விநியோகஸ்தர்கள்:

கொன்சிஸ்டரி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புத்தெரு கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்: ஓரியண்டல் இம்போட்கம்பனி

28, நம்பர் சாய்ப்புத் தெருவில் பெற்றுக்கொள்ளலாம்.

H. 131 12.10.44—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவுபசார விழா

இவ்வருட ஐப்பசித்திங்கள் 22ந் திகதி ஞாயிறுவாரம் மாலை 6 மணியளவில் சமூக சேவா சங்க ஆதரவில் அச்சங்கச் செயலாளன் திருவளர் செல்வன் என். ஏ. பொன்ராஜன் அவர்களுக்கு செல். பிரான்ஸிஸ்சேவியர் கழக முன்றிலில் திரு. எஸ். சிவபாலன் வன்னிமை முதலியார் அவர்கள் அருமைத் தலைமையில் பிரிவுபசார நல்விழா மிகவும் சிறப்பாக நிகழ்ந்தது. பல அங்கத்தவர்களும் பிரபுக்களும் விஜயம் செய்திருந்தனர். பிரியாவிடை நாடகருக்கு பூமாலை சூட்டி புதிய காரியதரிசி அவர்களால் வாழ்த்துப்பா வாசித்து அங்கத்தவர்களும் பிரபுக்களும கூடி நின்று நிழலுருவப் படப்பதிவு செய்வித்து சிற்றுண்டி தேனீர் விருந்து கொடுத்து தேனினுமினிய சொற்களில சொற்பொழிவுகள் செய்து செயலாளனின நல்லுரையுடன பிரிவுபசார விழா இனிது கலைந்தது. —சஷ்.த

---

## நல்லூர் இந்து இளைஞர் முன்னேற்ற சங்கம்

ஷை சங்க ஆதரவில் 23-10-44 திங்கட்கிழமை பி. ப. 3 மணி தொடக்கம் 6 மணி வரை நல்லூர் மேற்குவீதியிலும் இரவு 8 மணிதொடக்கம் 12 மணிவரை நல்லூர் பழனி யாண்டவர் மடத்திலும் கூட்டங்கள் நடந்தன. ஷை சங்கத்தலைவர் பிறக்டர் V. சோமசுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார்.

பின்னர் வேதாகம சைவ சித்தாந்த பண்டிதர் திரு. சா. அப்புக்குருக்கள் கந்தஷஷ்டியின் மகத்துவம் என்னும விஷயத்தைப்பற்றியும் திரு. K. கிருஷ்ணன் அவர்கள் பிரார்த்தனையென்னும் விஷயத்தைப் பற்றியும், சுருட்டுத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு. ஆ. துரைராசசிங்கம் அவர்கள் ஏகாககிரசித்தமென்றால் என்ன? என்ற விஷயத்தைப்பற்றியும் பேசினார்கள். பின்னர் V. சுப்பையா அவர்கள் சபைசகு வந்தனம் கூற தலைவர் முடிப்புரையுடன் கூட்டம் இனிது கலைந்தது. கடித.

---

## நீர்வேலியடி இளைஞர் மகாசபை

ஷை சபையின் ஆதரவின் கீழ் சென்ற சனிக்கிழமை (28-10-44) மாலை 5 மணியளவில் ஓர் இலவச வாசிகசாலை ஸ்ரீமான். க. ஐயாத்துரை அவர்களாலும், ஸ்ரீமான். பொ. தம்பு அவர்களாலும் திறக்கப்பட்டது. ஷை தலைவர்களும் சபையின் சில அங்கத்தவர்களும் இவ்வாசிகசாலையின் வளர்ச்சியைக் கருதி சொற்பொழிவு ஆற்றினர்கள். பின்பு கூட்டம் இனிது முடிவுற்றது. கடித.

---

## விவாகம்

கைலாயபிள்ளை—

மங்கையர்க்கரசி

சென்ற சனிக்கிழமை 28-10-44 இரவு 11 மணிக்கு மேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தினமேல் மண்டைதீவுக் கிராமச்சங்கத் தலைவர் திரு. க. கைலாயபிள்ளை யவர்களுக்கும திருநெல்வேலி திரு. சின்னத்துரையவர்களின்புதல்வி திருவளர் செல்வி மங்கையர்க்கரசி யம்மாளுக்கும் மணமகன் இல்லத்திற்றனே விவாகம் விதிப்படி சிறப்பாக நிறைவேறியது.

தம்பதிகள் அட்டைஸ்வரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் இறைவன் திருவருள் புரிவாராக.

---

## ஜெர்மானியர் தொடர்ந்து யுத்தத்தை நடத்துவார்களாம்

பேர்லின் 28—

ஜெர்மன் விளம்பர மந்திரியாகிய டாக்டர் கோயபெல்ஸ் இன்றிரவு செய்த ஆகாயவசனிப் பேச்சில் பின்வருமாறு கூறியுள்ளனர்:—

"சென்ற மூன்று மாசங்கள் யுத்தத்தின் போக்கை முற்றாக மாற்றியுள்ளது. ஆயினும் ஜெர்மானியர் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிச் சீவிப்பதற்குத் திடசித்தத்தைக்கொண்டுள்ளார்கள். தேசியசுதந்திரத்தை நிலைநாட்டி நாட்டில்சமாதானம் நிலவும்வரை ஜெர்மானியர் போராடியே தீருவார்கள். எங்கள் யுத்தத்தின் நோக்கம் யாவரும் தெரிந்ததே. அது எங்கள் தேசத்தையும் ஐரோப்பாவைப் பயப்படுத்தும் ஏன்முடிவில்லாத பீதியையும் ஒழிப்பதே. எங்கள் பகைவருடைய ஆகாய எதிர்ப்பை முற்றாக அழிக்க ஓயாது வேலைசெய்கின்றோம், ஏராளமாக ஆகாயப்படைகளையும விமானங்களையும பெருக்குகின்றோம். மஜர்மன் தொழிலாளர் எத்தனை புதம்புதிய கருவிகளைத் தங்கள தொழிற்சாலைகளில உண்டாக்குகின்றார்கள். இப்போ உள்ள நிலைமையில காலம் வந்தும நாங்கள வெற்றியடைவோம. எங்களைச் சத்துராதிகள பலதடவை கேட்டதாக்கணங்க நாங்கள அவர்களிடம சரணாகதியடைந்தால நாகம தான எங்களை வரும். ஜெர்மனி வெற்றியையிட்டுதறாத தீர்மானித்துள்ளது. எங்கள சத்துராதிகள கஷ்டப்படும் சனசமூகம முன்னேற்றமடையத்தக்கதான ஒரு யுத்த நோக்கத்தையும வைத்திருக்கவில்லை. மீச பகுதிக்கு அடிமைப்படுத்தி வைக்க எத்தனிக்கும பகைவரைத தடுக்கும்முறைகள உபயோகப்படுத்தாமல்சமமாக பின்னிற்கவில்லை. முற்கால ஏற்பட்ட கஷ்டநஷ்டத்திலிருந்து இனறு மீண்டும் சமயடைந்துள்ளோம். மேற்கு நாடுகள 1940-ம ஆண்டு பெற்றுள்ள வெற்றிகளில சிலவற்றைப் பறிக்கொடுத்தது எங்களுக்குத் துக்கத்தையும ஆத்திரத்தையும ஏற்படுத்தியுள்ளது.

யான மிகவும் சமீபமாகத்தான கொலோனுக்கும், நைன்லண்டுக்கும் போய்த் திரும்பியுள்ளேன். இன்று எங்கள தீமைவை வரா ஏமான வசதியங்களும் யுத்தக்கருவிகளுமே!

அமெரிக்காவின் ஏகாதிபத்தியக் கொள்கையைத் தடுப்பதற்கு ஐப்பான் முனைந்துள்ளது. இத்துணை ஜப்பானை எங்கள் பக்கத்தில வைத்திருப்பது எங்களுக்கொரு பெருமையே!

ஹிட்லர் அலைகளால் மோதப்பட்ட மலைபோலத் தைரியமாக நிற்கின்றார். அவர் எனக்குக் கூறிய தாவது இனறுபோல வெற்றியடைவதில திடமான நம்பிக்கையை தாமன்றும்வைத்திருக்கவில்லை யென்பதே. இங்கிலாந்தைப்போலவே யானும சமாதானத்தில்விருப்பமுடையவன ஆயின எனக்குத் தேவையானது மரியாதையானதும் கௌரவமானதுமான சமாதானமே.

எங்கள ஜெர்மன தேசம முழுவதிலும பகைவருக்கு விட்டுக்கொடுக்கும எண்ணமுடைய ஒரு தொழிலாளியாவது மேயாது மகனாவது போர்வீரனாவது, ஆசிரியல் வர்க்கமாவது, பெண்ணாவது தாயாவது கிடைக்கவேமாட்டாது".

இந்தப் பேச்சு முடிவடையும் போது ஆகாயவசனியில் ஒலிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

---

## காதல் வேட்கை

(A. இராமநாதன்)

இவ்வையகத்தின் கண் ஏனையோரும் காதலின்பம்! காதலின்பம்!! எனக்கனிவுறுகின்றனர். என்றாலும் எனக்கேற்பட்டுள்ள காதலின்பம் எவர்க்குங் கிட்டாதென் பதைத் தான் என் மனதிற் பதும்படி செய்தனள்என தன்புக்காதலி. என்னையறியாமலேயே யெழுந்துவிடும் பெரிய ஆசையானது, மாமலரின் தேனாகவும், என்னோடு மருவுதலாலுண்டாகு மின்பம் அழகிய வண்டாகவும், எனது இதயமாகிய புஷ்பத்தின்மேல் புவனமபோற்றச் சயனித்திருந்தாள் பூவையாள். அம்மட்டோ! அனங்கனின், தாமரைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, முல்லைப்பூ, நீலோற்பலப்பூ என்னும் புஷ்ப பாணங்கள் தைத்து ஆசையாகிய கடலிற் றள்ளியவுடன், அதற்கின்பமாகிய படகிலேறிக் கையாற்றழுவி, அழிவில்லாத அமிர்த போகக் கருவியாற் கடலைக் கடந்து ஆனந்தஞ் சேருங் கரையிலேயே கொண்டுபோய்ச் சேர்ப்பாள். இக்குணங்கள பொருந்த என்னோடு சேர்ந்தணைந்து உயிர் ஒன்றுபோலக் கூடி இன்பமமையாத நிலையில் மருவிப், போந்த, கரிய கூந்தலை யுடையவளாகிய காதலி, யார் செய்த வஞ்சனையாலோ, எனைமறந்து எங்கோஒளிந்து கிடக்கின்றனள. அந்தோ! இவ்வாறு நடுவழியில் கைவிடும் நாரியென முன்னதாகவே தெரிந்திருந்தால், நனவிலென்ன? கனவிற்கூடக் கருதியிருக்கமாட்டேனே. காமனின் ஐங்கணை கயிறற்ற கட்டுண்டு கருத்து மயங்குமெனக் கவனியாது, காலத்தை வீணாகக் கடத்துகின்றனமே!! ஈதென்ன கோலம்! இமை நேரமாவது அவளை மறந்திருப்போமெனவெண்ணில், என திரு கண்களிலலவா எனக்கொரு இயமனாக விளங்கி என்னிதயத்தை இருளடையச் செய்கின்றது. என்ன! மேகத்தைக் கூந்தலும, பிறையில் நெற்றியும், வில்லைப் புருவமும, கருங்குவளைமலர்களில் கண்களும, குமிழம்பூவில் நாசியும, வள்ளையில் காதுகளும; சங்கின் கழுத்தும், ஆலிலையின் அலைசையில் வயிறும், கதலியில தொடையும, பொய்கையின் தாமரைக்கிணைத்த பாதமும, கமுகில் கழுத்தும், கழையைக் கண்ட தோளுங்களும், ஆலவனில் முழுந்தாளும், வாளில் கண்களும, மூலைப்படுத்தாள் இடையும், குமுதத்தில் வாய்களும், மாந்தளிரில மேனியும, மகிழம்பூவில் இதழும, அன்னத்தை ஆசைப்படுத்தல் நடையும, அரசிலை அல்குலும் ஆவரத்தமாகவே, அந்தப் பெண்ணினிற அங்க அவயவங்களெல்லாம என மனக் கண்ணிலூடு முன்னே வந்து நின்று என்னை வருத்துகின்ற மாசுமறுவற்றவளாகப் பாசமாகச் செய்தமாற்றவளாயிருந்துவிட்டனளே. என்ன வஞ்சம்! ஹாஹா!! ஆகாயத்திலே மலர்ந்த சந்திரமண்டலம் போன்றவளான என் தாருயிர்க் காதலியினது கரிய கண்களின் விரிந்த நோக்கத்தின் அப்பல்லை மலர்ந்த கரியினது தண்ணிய பூங்கனைத் தவத்தால் யாம் பெற்றுக்கொண்டோமென மகிழ்ந்து உவகையுறுகின்ற பணைகளைப் பாடுகின்ற வண்டுக்கூட்டங்களும பறந்துபோய் விட்டனவே. சுழல்கின்ற கலாபத்தைத் தாங்கிய அன்னப்பேடுகளும் சோம்பி விட்டனவே, கோகிலங்கள் குயில் குறைந்தன மயில்களும் வைவேறாக மறைந்தனவே, என் தெய்வமே!

---

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### செவ்வாய் அக் 31

காலை 7-45 ஆரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திருப்புகழ்மணி † 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 பூவாளூர் எஸ் செல்லப்பா பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் எம் ராமஸ்வாமி ஐயர் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 ராமஸ்வாமிஐயர் புல்லாங்குழல் 5-40 இசைப்பயிற்சி 6 பூவாளூர் எஸ் செல்லப்பா பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6.40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள்7-45 கிரையாக்குடம் 8 மதராஸிலுள்ளபடி. குன்னக்குடி வெங்கடராமய்யர் பாட்டு 9 கர்சசடக நாகங்கள் 23 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9.45 பட்டினத்தார் பாடல்கள் 10.00 இசைவேளை †10.30 முடிவு.

### புதன் நவம் 1

காலை; 7-45 ஆரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 வானொலி வாத்ய கோஷ்டி 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.30 எச் ராமநாதய்யர் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 எச் ராமநாதய்யர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை; 5 வி சந்தானமய்யர் வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 குரல்வகை † 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7.15 அச்சுக்கூடம் 7-30 அறிவிப்புகள் 7.35 திரைகானம் † 7-45 தமிழில் செய்திகள் 8 முன்னேற்றம் 8-15 கூட்டுவாழ்க்கை 8.30 வி சந்தானமய்யர் வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 ஆங்கில நாடகம் 10 ஐரோப்பிய சங்கீதம் 10.30 முடிவு.

### வியாழன் நவ 2

காலை; 7.45 ஆரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 எஸ ஜி கிட்டப்பா † 8-15 ஆங்கிலத்தில செய்திகள் 8.30 லலிதாபாய் சாமண்ணா வீணை பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் † 1-30 ஆங்கிலத்தில செய்திகள் 1-40 திருநெல்வேலி என் குற்றாலலிங்கம்பிள்ளை பாட்டு 2 தமிழில செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2.30 முடிவு,

மாலை; 5 திருநெல்வேலி என் குற்றாலலிங்கம்பிள்ளை பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 லலிதாபாய் சாமண்ணா வீணை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 சுயபுத்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 வானொலி வாத்யகோஷ்டி 7-45 தமிழில செய்திகள் 8 ஆரோக்கியம் 8-15 சலவிடைக்குறிஞ்சி 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புத்தக விமர்சனம் 10 இசைவேளை 10-30 முடிவு.

---

விடம் தோய்ந்த வாளை வென்ற கண்களையுடையவளே; பூமியதிர நடவாத பொற்கொடியைப் மாதர்க்கரசியாகிய மாமலரை. மடப்பத்தை யுடையவளை, என் மனத்தின்கண் வாழ்பவளை, இன்பம் பொருந்தி நிற்கும் என்செல்வக்கடவாத வளை இனிப் போய்க் காணபதெந்நாள்? என்னும வேட்கை மேலிட்டதால்,

"விடவாளை வென்ற விழியாளைப்

பூமியின்மேலதிர

நடவாளைப் பெண்கள் நாயகமா

மொரு நாயகத்தை

படவாளை யென்னுள் வதிவாளை

யின்ப மருவ என்னைச்சேர்

கடவாளை யென்றெய்வமேயென்று

போயினிக் காண்பதுவே"

எனப் புலம்பி திருகுந் தலைவனின் இனிய கவியைப் பாருங்கள். என்னே ஆச்சரியம! இதயவேகம!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படி இன்னுமொரு முறை வருமா?

இன்று கல்விப் பகுதியார் (Education Department) பாடசாலைகளிற் கல்வி கற்பிக்கும் முறைகளைப்பற்றிப் பல திருத்தங்களைச் செய்கின்றனர். இங்கிலீஷ், தமிழ், சிங்களம் ஆகிய இரு தாய்மொழிகளையுங் கற்கும் இலங்கை மாணவர்களுக்குப் பெரிதும் நன்மை பயப்பனவேயாம்.

கற்போர்க்குச் செய்யப்படும் பல நன்மைகளைப் போலவே, கற்பிப்போர்க்கும், சில நன்மைகளையாயினும் வித்தியா இலாகாப் பகுதியார் (The Education Department) செய்யக்கருதுதல், அவர்களுடைய மாறிலாத மாக்கருணையைப் புலப்படுத்துவதொன்றாகுமன்றோ?

தமிழ் சிங்களம் ஆகிய இருமொழிகளையும் கற்பிக்கும், ஆசிரியர்களுடையும் இன்னல்களைப்பற்றிக் தேர்வுத் தலைவர்கள் (School Inspectors) நன்கறிவர்.

எண்ணிறந்த தோணிகளும் ஒப்ப நெடுங்காலம் உழைத்த, ஆசிரியர்களுக்குத் தகுதித் தாள் (Service Certificates) வழங்கப்படுமென வித்தியா இலாகாப்பகுதியார் 19th April 1928ல் ஓர் சுற்றறிக்கையை விடுத்திருந்தனர். அவ்வறிக்கையில் 1927ம் ஆண்டு September 30th அன்று, மனதிறகுக்கத 15 வருட, டைமை ஆற்றியவருக்குத் தகுதித் தாள் (ServiceCertificates) வழங்கப்படுமெனவும், குறிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையிற் கூறப்பெற்றிருந்தவாறு, சில ஆசிரியர்களுக்குத் தகுதித்தாள்கள் கிடைத்தன எனலாம்.

இவ்விதமான அறிக்கை இன்னொருமுறை வெளிவருமா என்ற ஆவலுடன் பல ஆசிரியர்கள் பின்னரும் காத்திருந்தனர். ஆயினும் இதுவரை அப்படியான அறிக்கை யாதும் வெளிவரவில்லை.

தற்போது வித்தியா இலாகாப்பகுதியார் எல்லாப் பாடசாலைகளிலும் (தோட்டப் பாடசாலைகள் உட்பட) மிகத் தகுதிவாய்ந்த ஆசிரியர்களை அமர்த்தக் கருதுகின்றனர்.

இப்படிச் செய்வதற்கு முன் 19th April 1928-ல் விடுத்த சுற்றறிக்கையைப்போல இன்னுமோர், சுற்றறிக்கையைத் தந்து தகுதித்தாள்களை (Service Certificates) வழங்குவதுடன், நெடுங்காலமாக அன்புடன் உழைத்த ஆசிரியர்களைத் தகுந்தபடி தகுதித் தாள்கள் வழங்குவதற்குக் கருவது, கல்வி இலாகாப் பகுதியாரின், தண்ணளியை வெளிப்படுத்துவதொன்றாகும்.

மேற்குறித்த பழைய அறிக்கையின் விவரங்களை, 1928 வைகாசி௴ வெளிவந்த வித்தியா சமாசாரப் பத்திரிகையின் 117ம் பக்கத்தில், The Education Gazette, Vol. 1 No, 9. May 1928) பார்க்கலாம்.

இலங்கை அரசாங்கக் கல்வி மந்திரியாரும் (Education Minister) கல்வி இலாகாத் தலைவரும் (Director of Education) கருணைகூர்ந்து கவனித்தல், பெருநன்மையாகும்.

ஆகவே 'இப்படி இன்னுமொரு முறை வருமா''? என்ற தலைப்பு மேலே குறிக்கப்பட்டிருக்கின்றது.

எல்லாப் பாடசாலைகளிலும் மிகத் தகுதிவாய்ந்த ஆசிரியர்களை ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டம் நடைமுறைக்கு வருமுன், மேற்குறித்தவாறு ஓர் நன்மையைச் செய்தல், ஆசிரியர்களுக்கு நன்மை பயக்குமென்பது பல ஆசிரியர்களின் கோரிக்கையாகும்.

ஆதலின் வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தாரும், இந்த அவசியத்தைக், கவனிக்க வேண்டுமென்று கல்விப்பகுதியாருக்கு எடுத்துரைத்தல் அவர்களுடைய தலைசிறந்த கடமையெனக.

தமிழாசிரியர்கள் நெடுங்காலமாகவே, அதிக நன்மையைக் கல்விப் பகுதியாரிடமிருந்து பெறாது வருந்துகின்றனரென்பது வெளிப்படை.

தமிழாசிரியரடைந்துவரும் இன்னல்களைப்பற்றிப் பொதுவாக, 3rd September 1923 ருத்திரோற்காரி வருடம் ஆவணி௴ கஅ தேதி வெளிவந்த, இந்துசாதனம், புத்தகம் நரு, இலக்கம் கஅல் இதழாசிரியர் கூற்றாக, 'தமிழ் உபாத்தியாயர்' என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்ட கட்டுரையிலும், சிறப்பாகத் தோட்டப்பாடசாலை ஆசிரியர்கள் அடையுந்துயர்களைப்பற்றியும் 24th August 1944 தாரண ஆண்டு ஆவணி ௯ந் தேதி வெளிவந்த இந்துசாதனம் புத்தகம் 56, இலக்கம் 38ல் 'ஆசிரியர்களின் கஷ்டம்' என்ற தலைப்பின்கீழ், நிருபர் கூற்றாக எழுதப்பட்ட கட்டுரையிலும், எடுத்துக் கூறப்பட்டிருப்பதை யாவரும் அறிவர்.

எனவே தமிழாசிரியர்களுடைய நிலைமையை உன்னும்போது, இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த, இரு பழந்தமிழ்ப் புலவர்கள் பாடிய இரு செய்யுள்கள் நினைவிற்கு வருகின்றன. அவை வருமாறு:—

அடசிவனே பலதொழிலு மிருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோ மறிவிலாமல்
திடமுளமோ கனமாடக் கழைக் கூத்தாடச்
செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோமில்லைப்
படமுளநற் பாம்பாட்டப் பிறந்தோமில்லைப்
பயமிலாத் தமிழைவிட்டுத் தையலார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோமில்லை
என்ன சென்ம மெடுத்துலகி லிரக்கின்றோமே.
—பெருக்குளத்தைப் படிக்காசுத்தம்பிரான்.

நலமான விடமறவுந் தியாகையர வும தடத்தினி யுரயக்—

காரிணைற்
கல்லாமலே பெருந்தேர்களுஞ் செருப்படியா
லுதைத்தோர்க்குங் கடிந்து பேசிற்
கில்லாமலே யடித்தோர்க்குங் கொடுத்தோ
பல்லாமல விழிநீர்சோர
எல்லாமுன் செய லென்றே யிருப்போருக்
கியாதேனு மீந்தீர்
—சொக்கநாதப்புலவர்.

தமிழாசிரியர், வித்தியா இலாகாப் பகுதியாரையே, தமக்கு உறுதுணையாகக் கடைப்பிடித்தொழுகுகின்றாராகலின், கல்வி மந்திரியாருக், கல்வித் தலைவரும், (Director) தகைத்து நெஞ்சிரங்கித் தமிழாசிரியர்கள். கடமை புரிந்த காலவெல்லையைக் குறித்து, அவரவருக்கேற்ற தகுதித் தாள்களை (Service Certificates) இன்னுமொருமுறை வழங்குமென்கின்ற ஒழுங்குகளைச் செய்வார்களென ஆவலுடன் காத்திருக்கின்றோம்.

இங்ஙனம்
க. சரவணமுத்து
கம்பனைத் தமிழாசிரியர் சங்கத் துணைத்தலைவர் (21-10-44)
இ. மகேசன்
கம்பனைத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி 21-10-44

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சங்கானை மேற்கு (1) சோமநாதர் சின்னக்குட்டி, வழக்காளி

எதிராக

சில்லாலை 1. சவுரியற்பிள்ளை அந்தோனிப்பிள்ளை காலஞ்சென்ற G. யோசப்பின் கோட்டால் நியமிக்கப்பட்ட தத்துவகாரன் 2. சுவாம்பிள்ளை சூசைப்பிள்ளையும் 3. பெண் சிசிலியாவும்

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 1425ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1944௵ கார்த்திகை௴ 18உ சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

காணி விபரம்

சங்கானை மேற்கு இறை வண்டவத்தையும் கலியம்புளியனையும் நிலப்பரப்பு 12 வீடுகளும் கிணறும் செய்பயிர்களும் எல்லைகிழக்கு சந்தியாபிள்ளை ஞானப்பிரகாசத்துக்குரிய ஆதனம், வடக்கு நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளைக்கும் சைமன் சந்தியாப்பிள்ளைக்கு முரிய ஆதனங்கள், மேற்கும் தெற்கும் கை ஒழுங்கை. இதில் கிணற்றில் பங்கும் தூர்வை வழிவாய்க்காலும் மற்றும் பங்காளருக்கு போகமிகுதி அடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்
கொமிஷனர்,

வட்டுக்கிழக்கு
18.10.44.
Mis 145 30-10 44&2.11.44.

## அறிவித்தல்
### உப உணவுப்பொருட்கள் விநியோகம்

1. அவரவர்கட் கேற்படுத்தப்பட்ட அநுமதி பெற்ற வியாபாரிகளிடம் பதில் உணவுக் கூப்பன்களைச் சமர்ப்பிப்பதனால் மட்டுமே கோதுமை அரிசி, கோதுமை மா, குரக்கன் முதலிய பதில் உணவுப்பொருட்களைப் பெறமுடியும். ஆனால் பதில உணவுப்பொருட்கள் வேண்டாதவிடத்து, சீனி, மிளகாய் முதலிய உப உணவுப்பொருட்களை பெறுவதற்கு எந்தக் கூப்பனும வியாபாரியிடம் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. தத்தம கூப்பன புஸ்தகங்களைக் காட்டுவதனால் மட்டுமே இவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. எந்த வாரத்திற்காவது பதில் உணவு பெற்றுக்கொள்ள விரும்பாதவர்கள், வியாபாரிகளிடம் மற்றைய உணவுப்பொருட்களுக்காகத் தங்கள் கூப்பன் புத்தகங்களைக் காட்டுமுன அந்த வாரத்திற்குரிய பதில் உணவுக்கூப்பன்களை வெட்டி எடுத்து அழித்துவிடுமாறு வேண்டப்படுகின்றனர்.

3. ஒவ்வொரு கூப்பனுக்கும் சேரவேண்டிய கட்டுப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளாமல் கூப்பன் சமர்ப்பிப்பவர்கள மேலும், சேரவேண்டிய கட்டுப்படுத்தப்படாத உணவுப்பொருட்களையும் தொடாது கூப்பனை ஏற்றுக்கொள்ளும் அநுமதிபெற்ற வியாபாரிகள் மேலும்சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்.

சி. குமாரசுவாமி,
உப உணவுக்கட்டுப்பாட்டதிகாரி,
யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், 23 அக்டோபர் 1944,
G 8) 30.10-44,

## காணி விற்பனவு விளம்பரம்

ஓமந்தை புகையிரத ஸ்தானத்துக்கும் சந்தி தெருக்குக்கும் சமீபத்திலுள்ள $16\frac{1}{2}$ ஏக்கர் வயல் விலமும் குடியிருக்க வசதியுள்ள (கிணறுமுள்ள) வளவும் விற்பனவுக்கிருப்பதால், வேண்டவிரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும். ஓமந்தையில ஞானசேகரம் கமம் என விசாரித்தால் யாரும் காணியைக் காட்டுவர்.

Miss. ஞா. தேவரத்தினம்,
சாசாலை, சாவகச்சேரி.
Mis. 139 23, 26, 30-10.44

## ஸ்ரீமான் வி. காசிப்பிள்ளை நினைவுவிழா

காலஞ்சென்ற பிறக்டர் ஸ்ரீமான் வி. காசிப்பிள்ளை அவர்களின் நினைவு விழா அரியாலை வாலிபர்சங்கத்தின் ஆதரவில் ஐப்பசி௴ ௫ந் திகதி (21-10-44) சனிக்கிழமை மாலை 4-30 மணியளவில் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இலங்கை அரசாங்கசபைத் தலைவர் சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி, அதிகார் A. நாகநாத முதலியார் டக்டர் S. சுப்பிரமணியம், ஸ்ரீமான் க. பொன்னம்பலம், ஸ்ரீமான் அ. ம. பூராடி முதலிய பெரியோர்கள் மேடையில வீற்றிருந்தனர். வரவேற்புப்பா படிக்கப்பட்டது. தலைவர் சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்கள் காலஞ்சென்ற புறக்டர் ஸ்ரீமான வி. காசிப்பிள்ளை அவர்களுடைய படத்தையும் காலஞ்சென்ற அவரது மகனுகிய ஸ்ரீமான கா. அருளம்பலம அவர்களுடைய உருவப்படத்தையும் திறந்து வைத்து தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தினர். அரியாலை வாலிப சங்கத்தவர்களால் ஒருசிறு நாடகமும், நடனங்களும் நடிக்கப்பட்டன. சங்கக் காரியதரிசி தலைவருக்கும் பேச்சாளர்களுக்கும், சபையோருக்கும் நன்றி கூறினார். இத்துடன் விழா இனிது முடிந்தது.

—நிருபர்.

## சைவ வித்தியாவிருத்திச் சங்க ஆசிரியர் சங்கம்

ஷெசங்க நிர்வாகசபைபொன்று 22-10-44-ல் கூடிற்று. அத்தினம் பின்வரும் விஷயங்கள் ஆலோசித்துத் தீர்மானிக்கப்பட்டன.

I 'சைவவித்தியாவிருத்திச் சங்க வளர்ச்சி'' என்னும் விஷயம்பற்றி இரு வியாசப்போட்டிகள் நடத்துதல். ஒன்று அபிமானிகள் யாவரும் பங்குபற்றலாம். முதற்தரமான வியாசத்துக்கு ரூபா 50 பரிசில அளிக்கப்படும். மற்றது சை. வி. வி. சங்கப்பாடசாலைகளிற் கல்வி பயிலுகின்ற மாணவர்கள் மாத்திரம் பங்குபற்றலாம், முதற்தரமான பத்து வியாசங்களுக்குத் தனித்தனி ரூ 5/ஐந்து ரூபாவீதமான புத்தகப் பரிசுகள் அளிக்கப்படும். முடிவு திகதி 15-1-45 காரியதரிசிக்கு அனுப்பவேண்டும். (மாணவர்கள் தலைமை ஆசிரியர்கள் மூலம் அனுப்பவேண்டும்).

II சைவப் பாடசாலைகளிலெல்லாம் சமயபாடங்களை ஒழுங்காகக் கற்பித்தல், பரீட்சித்தல், சமயப் பிரசங்கங்கள் செய்வித்தல்.

III ஊர்கள்தோறும் இந்துவாலிபர் சங்கங்களை ஏற்படுத்துதல்.

IV யாழ்ப்பாணக் குடாநாட்டில் பதினைந்து இடங்களை மத்தியஸ்தானங்களாகக்கொண்டு சங்கீத விழாக்களை நடத்துதல்.

சைவாபிமானிகள் யாவரும் இவ்விஷயங்களிற் பங்குபற்றுமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

காரியதரிசி

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing a Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 30, October, 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org